BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# புறநானூற்றில் கைம்மைப் பெண்களின் வாழ்வியல் நிலை
# The Socio-Living Status of Widowed Women in Purananuru

**செல்வி . ர. வில்வ விருக்ஷா**

உதவிப் பேராசிரியர், அறிவியல் மற்றும் மானுடவியல் துறை,

டாக்டர் மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, பொள்ளாச்சி 642 003

**Selvi. R. Vilva Viruksha**

Assistant professor, Science and Humanities Department, Dr.Mahalingam College of Engineering and Technology, Pollachi- 642 003, Tamilnadu, India. E.mail: vilvaviruksha1998@gmail.com

**Abstract**

Purananuru stands as an important work in Sangam literature that records the lived experiences of women. In particular, it portrays the condition of widowed women (kaimmai nilai) through various dimensions. The lives of widows are reflected through practices such as cutting their hair, removing bangles, renouncing ornaments, and following a simple diet. In addition, the poems also register their psychological states, including the grief caused by the loss of the husband, feelings of loneliness, social restrictions, and even thoughts of giving up life. This study examines the lifestyle of widowed women depicted in Purananuru and analyses their social as well as psychological conditions. Through this, it explains that in Sangam society, widowhood was not merely a personal state of sorrow, but also a way of life structured by social customs and norms.

**Keywords**

Purananuru, widowhood, widowed women, cutting of hair, removal of bangles, alli rice, self-immolation, Sangam-age women, women's life, social culture.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் நிலையைப் பதிவு செய்யும் முக்கிய நூலாகப் புறநானூறு விளங்குகிறது. அதில் கணவனை இழந்த பெண்களின் கைம்மை நிலை பல்வேறு பரிமாணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. கைம்மைப் பெண்கள் கூந்தல் கொய்தல், வளையல் கழற்றல், அணிகலன்களைத் துறத்தல், எளிய உணவு முறையைக் கடைப்பிடித்தல் போன்ற நடைமுறைகளின் வழி அவர்களின் வாழ்வியல் மாற்றங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும், கணவனை இழந்ததால் ஏற்பட்ட மனவேதனை, தனிமை உணர்வு, சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் உயிர்துறக்கும் எண்ணம் போன்ற உளவியல் நிலைகளும் பதிவாகியுள்ளன. இவ்வாய்வு புறநானூற்றில் இடம்பெறும் கைம்மைப் பெண்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமூக மற்றும் உளவியல் நிலையையும் ஆராய்கிறது. இதன் வழி சங்ககாலச் சமூகத்தில் கைம்மை என்பது ஒரு தனிப்பட்ட துயரநிலையாக மட்டுமன்றி, சமூக மரபுகளால் கட்டமைக்கப்பட்ட வாழ்வியல் நெறியாகவும் விளங்கியதை விளக்குகிறது.

**திறவுச் சொற்கள்**

புறநானூறு, கைம்மை நிலை, கைம்மைப் பெண்கள், கூந்தல் கொய்தல், வளையல் கழற்றல், அல்லியரிசி, உடன்கட்டை, சங்ககாலப் பெண்கள், பெண் வாழ்வியல், சமூகப் பண்பாடு.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர் பண்பாடு, சமூக அமைப்பு, வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றின் வரலாற்றுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. அவற்றுள் புறநானூறு, வீரயுகச் சமூகத்தின் அரசியல், போரியல் மற்றும் சமூக வாழ்வியலைப் பதிவு செய்யும் முக்கிய இலக்கியமாகும். புறநானூற்றுப் பாடல்களில் போரில் உயிரிழந்த வீரர்களின் பெருமை மட்டுமன்றி, அவர்களை இழந்து வாழ்ந்த குடும்பத்தினரின் துயரமும் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கை நிலை, கைம்மைக் கோலம், சமூகக் கட்டுப்பாடுகள், உளவியல் வேதனைகள் மற்றும் வாழ்வியல் மாற்றங்கள் ஆகியவை பல பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. கைம்மை என்பது வெறும் தனிப்பட்ட துயர நிலை அல்ல; அது சங்ககாலச் சமூகத்தின் பெண் குறித்த பார்வையையும், குடும்ப அமைப்பையும், பண்பாட்டு மரபுகளையும் வெளிப்படுத்தும் சமூக ஆவணமாக விளங்குகிறது. இவ்வாய்வு புறநானூற்றில் இடம்பெறும் கைம்மை நிலை குறித்த செய்திகளை ஆராய்ந்து, சங்ககாலப் பெண்களின் வாழ்வியலை வெளிக்கொணர முயல்கிறது..

**கைம்மைப் பெண்களின் வாழ்வியல் நிலை**

கணவனை இழந்த பெண்கள் கைம்மைக் கோலம் பூணும் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது

*"ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர,*
*அவிர்அறல் கடுக்கும் அம்மென்*
*குவையிரும் கூந்தல் கொய்தல் கண்டே."*

*(புறம். 25:12–14)*

இப்பாடலில் போரில் உயிரிழந்த வீரர்களின் மனைவியர் தமது கரிய கூந்தலைக் கொய்து கைம்மை பூணும் நிலை சித்தரிக்கப்படுகிறது. சங்ககாலச் சமூகத்தில் பெண்களின் கூந்தல் அழகு, இளமை மற்றும் மணவாழ்வின் அடையாளமாகக் கருதப்பட்டது. எனவே கூந்தலைக் கொய்தல் என்பது வெறும் துயர வெளிப்பாடு மட்டுமல்ல; கணவனை இழந்த பெண்ணின் சமூக அடையாள மாற்றத்தையும் குறிக்கிறது. பெண்ணின் உடலும் அழகும் கணவனின் இருப்போடு இணைத்துப் பார்க்கப்பட்டதை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

கணவனை இழந்த பெண்கள் அணிந்திருந்த வளையல்களை அகற்றிய செய்தி புறநானூற்றில் காணப்படுகிறது.

*"தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்"*

*(புறம். 238)*

இவ்வடியில் "தொடிகழி மகளிர்" என்ற தொடர் கைம்மைப் பெண்களைக் குறிக்கிறது. வளையல் என்பது திருமண வாழ்க்கையின் அடையாளமாக இருந்ததால், அதனை அகற்றுதல் மணவாழ்வின் முடிவைக் குறிக்கிறது. இதனால் பெண்ணின் அழகும் சமூக மதிப்பும் குறைந்ததாகச் சங்ககாலச் சமூகம் கருதியதையும் அறிய முடிகிறது.

கணவனை இழந்த ஆணின் துயரத்தை எடுத்துரைத்தாலும், கணவன்–மனைவி உறவின் ஆழத்தையும் வெளிப்படுத்துகிறது.

*"ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி,*
*ஞாங்கர் மாய்ந்தனள், மடந்தை,*
*இன்னும் வாழ்வல் என்இதன் பண்பே!"*

*(புறம். 245)*

இப்பாடலில் மனைவியை ஈமத்தீயில் அனுப்பிய பின்னரும் தன்னால் உயிர் வாழ முடிவதை எண்ணி கணவன் வருந்துகிறான். இதன் மூலம் தம்பதியரின் வாழ்க்கை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

பெருங்கோப்பெண்டு கைம்மை வாழ்க்கையை மறுத்து உடன்கட்டை ஏற விரும்புகிறாள்.

*"அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட*
*காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது,*
*உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ;"*

*(புறம். 246)*

இப்பாடல் கைம்மைப் பெண்களின் வாழ்க்கை முறையை விரிவாக எடுத்துரைக்கிறது. நெய்யற்ற உணவு, எளிய வாழ்க்கை, துறவற ஒழுக்கம் போன்றவை கைம்மை நோன்பின் பகுதிகளாக இருந்தன. இத்தகைய வாழ்க்கையை விட கணவனுடன் தீப்புகுவதே சிறந்தது என்று தலைவி

கருதுகிறாள். இதன் மூலம் கைம்மை வாழ்க்கையின் கடுமை வெளிப்படுகிறது.

*"நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்,*
*பேரஞர்க் கண்ணள், பெருங்காடு நோக்கித்*
*தெருமரும் அம்ம தானே." (புறம். 247)*

கணவனைப் பிரிந்த துயரத்தால் பெண்ணின் உடல் மற்றும் மனநிலை சிதைவடைவதை இப்பாடல் சித்தரிக்கிறது. இளமையும் அழகும் துயரத்தால் வாடிப்போகின்றன. கைம்மை என்பது வெறும் சமூக நிலை அல்ல; ஆழமான உளவியல் வேதனையும் ஆகும்.

*"அளிய தாமே சிறுவெள் ளாம்பல்!*
*இளையம் ஆகத் தழையா யினவே; இனியே,*
*பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப், பொழுது மறுத்து,*
*இன்னா வைகல் உண்ணும்*
*அல்லிப் படூஉம் புல் ஆயினவே"(புறம். 248)*

இப்பாடலில் கைம்மைப் பெண்கள் அல்லியரிசி உண்டு வாழும் நிலை குறிப்பிடப்படுகிறது.



முன்பு அலங்காரத்திற்குப் பயன்படுத்திய ஆம்பல், பின்னர் உணவிற்கான ஆதாரமாக மாறுகிறது. இது வாழ்க்கையின் திடீர் மாற்றத்தை வெளிப்படுத்துகிறது.

*"அடங்கிய கற்பின் ஆய்நுதல் மடந்தை"*
*(புறம். 249)*

*"கூந்தல் கொய்து, குறுந்தொடி நீக்கி,*
*அல்லி உணவின் மனைவியொடு, இனியே"*
*(புறம். 250)*

இவ்விரு பாடல்களும் கைம்மைப் பெண்ணின் முழுமையான தோற்றத்தை அளிக்கின்றன. கூந்தல் கொய்தல், வளையல் கழற்றல், அல்லியரிசி உண்ணுதல் ஆகியவை கைம்மையின் முக்கிய அடையாளங்களாக இருந்தன. பெண்ணின் வாழ்க்கை முறையே முழுமையாக மாற்றமடைந்ததை இவை காட்டுகின்றன.

*"வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி*
*அகலிது ஆக வனைமோ" (புறம். 256)*

கணவனுக்காக அமைக்கப்படும் ஈமத்தாழியில் தானும் இடம் பெற வேண்டும் என்று மனைவி வேண்டுகிறாள். கணவனின்றி வாழ்வதைவிட அவனுடன் மரணிப்பதே சிறந்தது என்ற மனநிலையை இது எடுத்துரைக்கிறது.

*"மொட்டையிட்டு அல்லியரிசி உண்டு வாழும்*
*கழிகல மகளிரைப் போல" (புறம். 280)*



இப்பாடலில் கணவனை இழக்கவிருக்கும் மனைவி, கைம்மை வாழ்க்கையை ஏற்றுக்கொள்வதை விட கணவனுடன் உயிர் நீங்க விரும்புகிறாள். இதன் மூலம் கைம்மை வாழ்க்கை எவ்வளவு துயரமிக்கதாகக் கருதப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

புறநானூற்றுப் பாடல்களின் வழி சங்ககாலச் சமூகத்தில் கைம்மை நிலை ஒரு தனித்துவமான சமூக மற்றும் பண்பாட்டு அமைப்பாக இருந்தது என்பதை அறிய முடிகிறது. கணவனை இழந்த பெண்கள் கூந்தல் கொய்தல்,

வளையல் கழற்றல், அல்லியரிசி உண்ணுதல் போன்ற நடைமுறைகளின் மூலம் தங்களது கைம்மை நிலையினை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், கணவனின்றி வாழ்வதைவிட அவனுடன் உயிர் நீங்க விரும்பும் மனநிலையும் சில பாடல்களில் காணப்படுகிறது. இவை அனைத்தும் சங்ககாலச் சமூகத்தில் பெண்ணின் வாழ்வு கணவனை மையமாகக் கொண்டு அமைந்திருந்ததைக் காட்டுகின்றன. அதேவேளையில், கைம்மைப் பெண்களின் மனவேதனை, சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் வாழ்வியல் போராட்டங்களைப் பதிவு செய்வதன் மூலம் புறநானூறு பெண்களின் வரலாற்றையும் சமூக உண்மைகளையும் ஆவணப்படுத்தும் முக்கிய இலக்கியமாக விளங்குகிறது. எனவே புறநானூற்றில் இடம்பெறும் கைம்மை நிலை குறித்த செய்திகள், சங்ககாலப் பெண்களின் சமூக வரலாற்றை அறிய உதவும் அரிய சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. சாமிநாதையர், உ. வே., புறநானூறு – மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்,சென்னை, 1894
2. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., ,புறநானூறு – மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை,1947
3. புலியூர்க் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010